DEPOSITION OF WITNESS
(Chapter XXIII Code of Criminal Procedure)
IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, FAST TRACK COURT, KARAIKUDI.
C.C. No .33/2021 P.W. 10

Name: அழகர்		Father's Name	: கார்மேகம்
Village:		Taluk	:
Age	:	Occupation	:
Caste	:	Religion	:

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 24.11.2023

முதல் எதிரி ஆஜர். இரண்டாம் எதிரி ஆஜரில்லை. கு.வி.மு.ச பிரிவு 317 படி மனுதாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டுள்ளது.

24.11.2023: முதல் விசாரணை:

நான் காரைக்குடியில் வசித்து ஆட்டோ ஓட்டும் தொழில் செய்து வருகிறேன். காரைக்குடி புதிய பேருந்து நிலையத்தில் ஒரு நாள் காரைக்குடி வடக்கு காவல் நிலைய போலீசார் ஒரு வெள்ளைத்தாளில் எனது கையொப்பத்தினை பெற்றனர். என்னிடம் காட்டப்படும் பார்மை மகஜரில் உள்ள கையொப்பம் என்னுடையதில்லை. எதற்காக வாங்கினார்கள் என்று எனக்கு விபரம் தெரியாது.

(சாட்சி பிறழ்சாட்சியாக பாவிக்கப்பட்டு அரசு தரப்பில் குறுக்குவிசாரணை)

காரைக்குடியில் புதிய பேருந்து நிலையத்தில் தான் ஆட்டோ ஓட்டி பிழைப்பு நடத்தி வருவதாகவும் கடந்த 10.07.2006 அன்று 12.15 மணியளவில் காரைக்குடி குற்றப்பிரிவு சார்பு ஆய்வாளர் குற்ற எண். 522/2006 u/s 457,380 r/w 511 IPC வழக்கில் சம்பவ இடத்தில் பார்வையிட்டு பார்வை மகஜர் மற்றும் மாதிரி வரைபடம் தயார் செய்தபோது தானும், ஸ்ரீதரன் என்பவரும் சாட்சியாக இருந்து கையொப்பம் செய்ததாக போலீசாரிடம் வாக்குமூலம் கொடுத்துவிட்டு தற்போது வழக்கு குறித்து விபரம் எதுவும் தெரியாது என்று பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

சாட்சியால் திறந்த நீதிமன்றத்தில் சொல்லப்பட்டு என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்து காண்பிக்கப்பட்டு அவரால் சரி என்று ஒப்புக்கொள்ளப்பட்டது.

(ஒப்பம்.செல்வி.செ.ஜெயப்பிரதா, B.Sc.,B.L.,(Hon's))
விரைவுநீதிபதி, காரைக்குடி.